# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| Spl.C.C.No. | 80/2019 | அரசு தரப்பு | எ.தசா.1 |
|---|---|---|---|
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | பழனிசாமி | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | ரங்கசாமி | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 11th day of April 2022.

முதல் விசாரணை

எனக்கு இவ்வழக்கில் எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப் பெற்றதன்பேரில் நான் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். நான் முன்னால் அமைச்சர் திரு.பொங்கலூர் பழனிசாமியின் ஆடிட்டராக கடந்த 30 வருட காலமாக இருந்து வருகிறேன். ஒவ்வொரு வருடமும் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் வருமானவரி அறிக்கை தாக்கல் செய்து, வருமான வரியும் செலுத்தி வருகிறார். தனிநபர் வருமானம் என்ற தலைப்பில் மேற்படி திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களுக்கு என்ன, என்ன தலைப்பின்கீழ் வருமானம் என்றால்,

1) Ex. MLA pension

2) வாடகை வருமானம்,

3) விவசாய வருமானம்,

4) அமைச்சராக பதவியில் இருந்தபோது அதற்கான சம்பளம்.

1971 முதல் 1975 வரை சட்டமன்ற உறுப்பினராகவும், 1996 முதல் 2001 வரை தமிழக அமைச்சராகவும், 2006 முதல் 2011 வரை தமிழக அமைச்சராகவும் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் பதவி வகித்து வந்தார். Ex.P.113 கடிதத்தில் விளக்கம் கேட்டு இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரி அனுப்பியுள்ளார் என்றால், சரிதான். மேற்படி கடிதத்தின்படி வருமானத்திற்கு அதிகமாக சேர்க்கப்பட்டதாக சொல்லும் சொத்தின் மதிப்பு ரூ.55,01,652.19 என சொல்லப்பட்டுள்ளது. அதில் கணக்கீட்டுக் காலமாக (Check Period) 13.5.2006 முதல் 31.3.2010 என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில் 7 Statement குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு விவரங்கள் சரியானதல்ல. மேற்படி Ex.P.113 கடிதத்திற்கு Ex.P.114 பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி பதில் அறிவிப்பை நானும், திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களும் அமர்ந்து பரிசீலனை செய்து, பின்னர் Ex.P.114 அனுப்பினோம். Ex.P.113 கடிதத்தில் புலனாய்வு அதிகாரி அவர்கள் திரு.பொங்கலூர் பழனிசாமிக்கு வரப்பெற்ற நான்கு வருமான மூலங்கள் ( sources of Income ) விடுபட்டுள்ளன. அவற்றை Ex.P.114-ல் தெரிவித்துள்ளோம். அதன் விவரம் வருமா:-

1) 22.10.2005 அன்று திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் ரூ.25 லட்சம் மெசர்ஸ் சக்தி பிலிம்ஸ், திருப்பூர் என்ற நிறுவனத்திற்கு காசோலை எண்.463717, Indus-Ind Bank, அவினாசி ரோடு கிளை, கோயமுத்தூர் என்ற காசோலை மூலம் கொடுத்துள்ளார். அதை 5.10.2007 மெசர்ஸ் சக்தி பிலிம்ஸ், திருப்பூர் என்ற நிறுவனம் காசேலை எண்.247185, தேதி 05.10.2007 ல் ஐ.என்.ஜி. வைசியாள் வங்கி, திருப்பூர் கிளையில் திரு.பொங்கலூர் பழனிசாமி பெயரில் வரையப்பட்ட காசோலை மூலம் கொடுத்துள்ளார்கள். அந்த காசோலையை திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் அவருடைய சேமிப்பு கணக்கு எண்.418389 சிட்டியூனியன்

பேங்க், ராம்நகர் கிளை கோயமுத்தூர் என்ற கணக்கில் வசூலுக்கு தாக்கல் செய்து, 11.10.2007 ஆம் தேதி அன்று வசூல் ஆகியுள்ளது.

2) 2.4.2004 அன்று திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் மனைவி திருமதி.விஜயலட்சுமி பழனிசாமி ரூ.20 லட்சம் ரூபாயை காசோலை எண்.144205 ஐ.சி.ஐ.சி.ஐ பேங்க், திருச்சிரோடு கிளை, கோயமுத்தூர் என்ற காசோலை மூலம் மெசர்ஸ் சக்தி பிலிம்ஸ், திருப்பூர் என்ற நிறுவனத்திற்கு கொடுத்திருந்தார். 31.5.2004 தேதியில் திருமதி.விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் காலமாகி விட்டார். 5-10-2007 அன்று காசோலை எண்.247186 ஐ.என்.ஜி. வைசியாள் வங்கி, திருப்பூர் கிளையில் வரையப்பட்ட ரூ.21,55,520/-ற்கான காசோலையை திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் பெயரில் வழங்கியுள்ளார்கள். மேற்படி ரூ.21,55,520/- என்பது அசல் தொகை ரூ.20,00,000/-, வட்டித் தொகை ரூ.1,55,520/- (After deducting tax deducted at source) ஆக மொத்தம் ரூ.21,55,520/- ஐ திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் வங்கி கணக்கான சிட்டியூனியன் வங்கி, ராம்நகர் கிளை, கோயமுத்தூர் சேமிப்புக் கணக்கு எண்.418389-ல் வசூலுக்கு தாக்கல் செய்து, 11.10.2007-ல் வசூலாகியுள்ளது.

மேலே சொன்ன வருமானம் மூலம் 1 மற்றும் 2 வருமானங்கள் சேர்த்து ரூ.46,55,520/- Single entry ஆக 11.10.2007 ஆம் தேதியில் Credit ஆகியுள்ளது. Ex.P.114 பதிலில் மூன்றாவது ஆவணமாக பொங்கலூர் பழனிசாமியின் சேமிப்பு கணக்கு விவர அறிக்கை இணைத்து அனுப்பியுள்ளோம். அந்த அறிக்கையில் 11.10.2007 தேதியில் ரூ.46,55,520/- Single entry ஆக பதிவாகியுள்ளது. மேற்படி வருமானங்கள் Ex.P.113-ல் விடுபட்டுள்ளது என Ex.P.114-ல் சொல்லியுள்ளோம்.

Ex.P.114-ல் பத்தி 3a-ல் மெசர்ஸ் விஜயலட்சுமி பழனிசாமி சேரிட்டபிள் டிரஸ்ட்டிற்காக குறைவு முத்திரை தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ஆக ரூ.8,07,715/- செலுத்தப்பட்டுள்ளதை திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் செலவு தொகையாக Ex.P.113-ல் எடுத்துக் கொண்டு கணக்கிட்டுள்ளார்கள். அவ்வாறு கணக்கிட்டுள்ளது தவறானதாகும். மேற்படி தொகை திரு.பொங்கலூர் பழனிசாமியின் செலவினமாக எடுத்துக் கொள்ள முடியாது. அது பற்றிய வங்கிக் கணக்கு அறிக்கையை Ex.P.114-ல் நான்காவது ஆவணமாக இணைத்துள்ளோம். அதில் மெசர்ஸ் விஜயலட்சமி சேரிட்டபிள் டிரஸ்ட்டின் வங்கி கணக்கு விவரங்களைக் சொல்லியுள்ளோம். அதில் பதிவு கட்டணமாக ரூ.1,63,575/-, குறைவு முத்திரைத் தீர்வை ரூ.6,43,900/- 29.10.2009 அன்று இந்தியன் வங்கி, திருச்சிரோடு, கோயமுத்தூர் கிளையில் கலைஞர் கருணாநிதி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலிஜி வங்கி கணக்கிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது (Debit ஆகியுள்ளது). மேற்படி தொகைகளை திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் செலவினமாக கணக்கில் கொண்டது தவறாகும்.

Ex.P.114 ல் பத்தி 3b-யில் திரு.பொங்கலூர் பழனிசாமியின் செலவீனமாக ரூ.77,260/- என புலனாய்வு அதிகாரி Ex.P.113-ல் காண்பித்திருப்பது தவறானது எனச் சொல்லியுள்ளோம். அந்த தொகை அந்த வீட்டின் உரிமையாளரான திருமதி.கே.பொன்னம்மாள், (திரு.பொங்கலூர் பழனிசாமியின் மாமியார்) அவர்களுக்கு சொந்தமான வீடாகும். அந்த வீட்டிற்கு திருமதி கே.பொன்னம்மாள்தான் வரி செலுத்தி வருகிறார். திருமதி கே.பொன்னம்மாள் அவரகளுக்கு விவசாய வருமானங்கள் உள்ளது. அந்த வீட்டிற்கான வரிவிதிப்பு திருமதி கே.பொன்னம்மாள் பெயரில்தான் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் மேற்படி ரூ.77,260/-ஐ திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் செலவீனமாக Ex.P.113-ல் சொல்லியிருப்பது தவறானதாகும்.

Ex.P.114-ல் பத்தி 3c-யில் திருமதி.பொன்னம்மாள் பெயரில் செலுத்தப்பட்டுள்ள வீட்டு வரி ரூ.25,900/- திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் செலவீனமாக Ex.P.113-ல் காண்பித்துள்ளது தவறு எனச் சொல்லியுள்ளோம். திருமதி பொன்னம்மாளுக்கு விவசாய வருமானங்கள் உள்ளது. மேற்படி வீடு திருமதி பொன்னம்மாளுக்கு சொந்தமானதாகும். அவ்வீட்டிற்கான வரி விதிப்பும் திருமதி பொன்னம்மாள் பெயரில்தான் ஏற்பட்டிருக்கிறது.

மேலும் Ex.P.114-ல் பத்தி 3c-ல் ரூ.3,91,490/- வருமான வரி செலுத்தியுள்ளதை திரு.பொங்கலூர் பழனிசாமியின் செலவீனமாக / கணக்கீட்டு காலத்தில் செலவீனமாக கணக்கில் எடுத்துள்ளார்கள். அவ்வாறு கணக்கீடுக் காலத்தில் செலவீனமாக கணக்கீடு செய்திருப்பது தவறானதாகும். ஏனெனில் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் அவரது வருமான வரியை 27.12.2010-ல் ரூ.2,19,840/- மற்றும் 27.1.2011-ல் ரூ.9,710/- ஆக மொத்தம் ரூ.2,29,550/- தொகையை கணக்கீட்டுக் காலத்திற்கு பிறகு செலுத்தியுள்ளார்கள். கணக்கீட்டுக் காலத்திற்கு பிறகு செலுத்திய வருமான வரி தொகையை Ex.P.113-ல் கணக்கீட்டுக் காலத்தில் செலவீனமாக எடுத்துக் கொண்டது தவறாகும். அதற்கான ஆவணங்களையும் Ex.P.114-ல் நான்காவது ஆவணமாக இணைக்கப்பட்டுள்ளது.

Ex.P.114 பத்தி 4-ல் 1-7-2006 அன்று ரூ.10 லட்சம் மெசர்ஸ் விஜயா மினரல்ஸ் எக்ஸ்போர்ட் என்ற கூட்டாண்மை நிறுவனத்தின் சிட்டி யூனியன் வங்கி கணக்கிலிருந்து - கணக்கு எண்.18132 என்ற கணக்கிலிருந்து பணத்தை எடுத்து செக்யூரிட்டி சர்வீஸஸ் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்தின் மூலமாக திருமதி இந்து முருகேசன் அவர்கள் பெயரில் பங்குகள் வாங்கப்பட்டுள்ளது. அந்த ரூ.10 லட்சத்தை கணக்கீட்டுக் காலத்தில் திரு.பொங்கலூர் பழனிசாமியின் மூலதனமாக காண்பித்துள்ளார்கள். அது தவறாகும். Ex.P.114-ல் மேற்படி வங்கி கணக்கு

அறிக்கையை திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் கூற்றுக்கு ஆதரவாக 5 ஆவணமாக இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

Ex.P.114, 4 வது பத்தியில் காசோலை எண்.354907, தேதி 1.7.2006 என்பதற்கு பதிலாக 30.6.2006 என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. Ex.P.114 இணைப்பு ஆவணம் 5-ல் - வங்கி அறிக்கையில் 1.7.2006 நாளிட்ட காசோலை எண்.354907-ல் ரூ.10 லட்சம் விஜயா மினரல்ஸ் எக்ஸ்போர்ட் நடப்பு கணக்கில் பற்றாகியுள்ளது.

Ex.P.114 ல் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் கணக்கீட்டுக் காலத்தில் சொத்து ஏதுவும் சேர்க்கவில்லை என கணக்கிட்டுச் சொல்லியுள்ளேன். எனது கணக்கின்படி, திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் ரூ.55,01,652/- வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதாக Ex.P.113-ல் புலனாய்வு அதிகாரி சொல்லியிருப்பது தவறு என கணக்கிட்டு காண்பித்துள்ளேன். Ex.P.114 அறிக்கையை கூடுதல் கண்காணிப்பாளர் திருமதி சண்முகபிரியா நான்தான் கொடுத்தேன். அவ்வாறு Ex.P.114 பதில் விளக்கத்தை நான் கூடுதல் கண்காணிப்பாளர் திருமதி சண்முகபிரியா அவர்களிடம் கொடுத்தது சம்மந்தமாக அன்றோ அல்லது அதற்கு பிறகோ என்னை திருமதி சண்முகபிரியா அவர்கள் விசாரிக்கவில்லை. திரு.பொங்கலூர்பழனிசாமி அவர்களிடமும் Ex.P.114 குறித்து திருமதி சண்முகபிரியா அவர்கள் விசாரிக்கவில்லை. Ex.P.114 பதில் அறிவிப்பிற்கு திருமதி.சண்முகபிரியா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எவ்வித மறுப்பும், பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை. PW.54 திருமதி சண்முகபிரியா அவர்கள், Ex.P.114 – 1,2 இனம் சேர்த்து ரூ.46,55,520/- என்பது காசோலை எண்.463717 மெசர்ஸ் மேரீஸ் சிமெண்ட் நடப்பு கணக்கு 0021 - 442091 - 060 என்ற கணக்கிற்கு Indus-Ind Bank, அவினாசி ரோடு கிளை வங்கி காசோலை என்றும், அது திரு.பொங்கலூர் பழனிசாமிக்கு வழங்கப்பட்ட காசோலை அல்ல

என்றும், சொல்லியுள்ளார், அது விவரம் சரியானதா என்றால், அந்த விவரம் சரியானதல்ல. ஆதலால் Ex.P.114-ல் சொல்லியுள்ள விளக்கத்தை ஏற்க முடியாது என புலனாய்வு அதிகாரி சொல்வது சரியானதல்ல. 11.10.2007-ல் வங்கி கணக்கு எண்.418389 பொங்கலூர் பழனிசாமியின் கணக்கில் பரிவர்த்தனை ஏதும் ஆகவில்லை என புலனாய்வு அதிகாரி சொல்வது தவறானதாகும். 11.10.2007 ல் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் சிட்டியூனியன் பேங்க், ராம்நகர் கிளை, கோவையில் சேமிப்பு கணக்கு எண்.418389 என்ற கணக்கை துவங்கியுள்ளார். அன்றைய தினம் ரூ.101/- அந்த சேமிப்பு கணக்கில் Credit ஆகியுள்ளது. அதே தேதியில், அதாவது 11.10.2007 ஆம் தேதியில் Ex.P.114-ல் பத்தி 1,2 சொல்லியுள்ள வருமானங்கள் மேற்படி சேமிப்பு கணக்கில் ரூ.46,55,520/- Credit ஆகியுள்ளது. மேற்படி ரூ.46,55,520/- என்பது மெசர்ஸ் மேரீஸ் சிமெண்ட் கணக்கிலிருந்து திரு.பொங்கலூர் பழனிசாமியின் சேமிப்பு கணக்கிற்கு வரப் பெற்ற தொகை என புலனாய்வு அதிகாரி சொல்வது தவறாகும். Ex.P.116 விளக்கத்திற்கு பிறகு கணக்கீட்டு காலத்தில் திரு.பொங்களூர் பழனிசாமி வருமானத்திற்கு அதிகமாக ரூ.44,64,387.19 சொத்து சேர்த்திருப்பதாக இறுதி அறிக்கையில் சொல்லியிருப்பது தவறானது ஆகும். புலன் ஆய்வு அதிகாரி ExP77 மற்றும் ExP114 இணைக்கப்பட்டுள்ள மூன்றாவது ஆவணமான வங்கி சேமிப்பு கணக்கு அறிக்கையில்- திரு.பொங்களூர் பழனிச்சாமியின் பெயரில் உள்ள சிட்டி யூனியன் வங்கி, ராம்நகர் கிளை, கோயமுத்தூர் சேமிப்பு கணக்கு அறிக்கையில் S.CRS என குறிப்பிடப்பட்டுள்ளது. Sundry Creditors என்பதை குறிக்கும் என்றும், அது காசோலை மூலம் கிரிடிட் ஆன தொகை அல்ல என கூறுவது தவறானது ஆகும். மேற்படி தொகை இரண்டு காசோலைகள் மூலம் (ரூ.25,00,000 + ரூ.21,55,520) வசூலான தொகை ஆகும்.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையில் ஏதுனும் ஆவணங்களை முன்னிலைப்படுத்த சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை. அழைப்பாணையில் எந்த ஆவணத்தை பற்றி நான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற குறிப்பும் இல்லை என்றால், சரிதான். நான் ஆடிட்டர் என சொல்வதற்கான ஆதரவு எதுவும் முதல்விசாரணையில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் முன்னாள் அமைச்சர் திரு.பொங்களூர் பழனிச்சாமி அவர்களுக்கு 30 வருடகாலமாக வருமான வரி தாக்கல செய்து வந்தேன் என சொல்வதற்கான ஆதரவுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருமான வரியில் விவசாயத்திலிருந்து வரும் வருமானம் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். ExP114 ல் எனது கையொப்பம் ஏதும் இல்லை என்றால், சரிதான். Ex.P.114 ல் நானும், திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களும் அமர்ந்து ஆவணங்களை பரிசீலித்து Ex.P.114 ஐ தயாரித்ததாக எவ்வித குறிப்பும் அதில் காணப்படவில்லை என்றால், சரிதான். Ex.P.114 ல் இணைப்பு ஆவணங்களாக இணைக்கப்பட்டுள்ள 6 ஆவணங்களில் மாண்புமிக அமைச்சர் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களது கணக்கீட்டுக் காலத்திற்கான ஆடிட்டர் அறிக்கை எதுவும் இணைக்கப்படவில்லை என்றால், சரிதான். 2005 ஆவது வருமான வரிக் கணக்கீட்டு வருடத்திற்கான வருமான வரி அறிக்கையோ அல்லது ஆடிட்டர் அறிக்கையோ இணைக்கப்படவில்லை என்றால், சரிதான். வருமானவரி அறிக்கை, ஆடிட் அறிக்கை ஆகியவற்றை பரிசீலனை செய்து பார்த்தால்தான் ஒரு முழுமையாக முடிவிற்கு வரமுடியும் என்றால், சரிதான். நான் 30 வருட காலங்களாக ஆடிட்டராக வேலை பார்த்து வருகிறேன். வங்கி பரிவர்த்தனை மற்றும் வருமானவரிதுறையில் சொல்லப்பட்டுள்ள சில அப்ரீவேஷன்களுக்கு விளக்கம்

எனக்குத் தெரியும் என்றால், சரிதான். வங்கி பரிவர்த்தனையில் S.CRS என்பது Sundry creditors என்று பொருள்படும் என்றால், சரிதான். ஆனால் வங்கி பரிவர்த்தனையில் S.CRS என்பது Sundry creditors என்று பொருள்படாது. S.CRS என்பது Sundry creditors என பொருள்படாது என நான் சொல்வதற்கு பிடிபாடாக எவ்வித ஆவணங்களையும், ஆதரவுகளையும் நான் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். Sundry creditors மற்றும் Sundry debtors என்பது வியாபாரம் சம்மந்தமான பரிவர்த்தனையில் ஏற்படும் நடவடிக்கை என்றால் சரிதான்.

கேள்வி - Is it correct to say that, Sundry creditors means, a person who gives goods or services to the business in credit or does not receive the payment immeditely from the business and is liable to receive the payment from the business in future is called Sundry creditors?

பதில் - Sundry creditors என்பதற்கான பொருள் கேள்வியில் சொல்லப்படுவதுபோல் அல்ல. ஒரு நபர் ஒரு பொருளை கடனுக்கு விற்பனை செய்யும்பொழுது பொருளை வாங்கும் நபர் பொருளை விற்பனை செய்த நபருக்கு பணம் கொடுக்கும்வரை பொருளை வாங்கிய நபரை Sundry creditors என்று அழைப்போம்.

கேள்வி - Is it correct to say that, Sundry debtors means, a person who receive the goods or service from the business in credit or does not make payment immediately and is liable to pay the amount in future is called as Sundry debtors?

பதில் - Sundry debtors என்பதற்கான பொருள் கேள்வியில் சொல்லப்படுவது போல் அல்ல. பொருளை வாங்குபவர் அதற்கான பணத்தை உடனே கொடுக்கவில்லையெனில் அவ்வாறு அப்பொருளுக்கான பணத்தை கொடுக்கும்வரை பொருளை வாங்கியவரை Sundry debtors என்று அழைப்போம்.

Sundry debtors, Sundry creditors என்ற பதமானது இரண்டு நபர்களுக்கிடையேயான வணிக நடவடிக்கைகள் அல்லது இரண்டு நிறுவனங்களுக்கு இடையேயான வணிக நடவடிக்கைகளின் பயன்படுத்தப்படும் பதம் என்றால் சரிதான். வணிக நடவடிக்கை அல்லாத தனிப்பட்ட இரண்டு நபர்களுக்கிடையேயான

கொடுக்கல்-வாங்கல் நடவக்கைகளுக்கு மேற்படி பதம் பயன்படுத்தப்பட மாட்டாது என்றால், சரிதான். Ex.P.114 ல் எனது கையொப்பம் காணப்படாததாலும், மாண்புமிகு முன்னால் அமைச்சர் திரு.பொங்கலூர் பழனிசாமியோடு நான் அமர்ந்து, கலந்து ஆலோசித்து Ex.P.114 பதில் விளக்கத்தை தயாரித்ததாக மேற்படி Ex.P.114 ஆவணத்தில் எவ்வித குறிப்பும் காணப்படாததாலும், எனது சாட்சியம் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால், சரியல்ல. 22.10.2005 ஆம் தேதி அமைச்சர் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் கோயமுத்தூர் அவினாசி ரோடு கிளை, Indus-Ind வங்கி காசோலை எண்.463717 மூலமாக திருப்பூர் சக்தி பிலிம்ஸ்ஸுக்கு ரூ.25 லட்சம் வழங்கியதாக என்னுடைய முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால், சரிதான். 2005 ஆம் வருட காலக்கட்டத்திற்கான வருமானவரி தாக்கலில் 22.10.2005 அன்று திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் திருப்பூர் சக்தி பிலிம்ஸ்ஸுக்கு ரூ.25 லட்சம் கொடுத்ததாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால், சரிதான். வருமானவரி தாக்கலில் அந்த விவரம் டிஸ்போஸ் ஆகாது. மேற்படி ரூ.25 லட்சம் சக்தி பிலிம்ஸ்ஸுக்கு திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களால் கடனாக கொடுக்கப்பட்டதால் அது வருவமான வரி கணக்கில் துலங்காது.

கேள்வி - கடனமாக கொடுக்கப்படும் தொகை ஒரு தனி நபரின் வருமானம் என்றால்?

பதில் - அவ்வாறு சொல்ல முடியாது. கடனாக கொடுக்கும் நபர் வேறு ஒரு நபரிடமிருந்தோ அல்லது வங்கியிலிருந்தோ கடன் பெற்று கடன் கொடுக்க முடியும்.

அவ்வகையில் மேற்படி ரூ.25 லட்சம் ரூபாய் முன்னால் அமைச்சர் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களால் திருப்பூர், சக்தி பிலிம்ஸுக்கு கடனாக கொடுக்கப்பட்டதா, அல்லது அமைச்சர் அவர்களால் வேறு ஒரு நபரிடமிருந்தோ அல்லது

வங்கியிடமிருந்தோ கடன் பெற்று, அத்தொகை திருப்பூர், சக்தி பிரிம்ஸ்ஸுக்கு கொடுக்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால், சரிதான். Ex.P.77 வரிசை என்பது திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களது சிட்டியூனியன் பேங்க், ராம் நகர் கிளை, சேமிப்பு கணக்கின் அறிக்கை என்றால், சரிதான். மேற்படி கணக்கு அறிக்கை 13.6.2005 முதல் 31.3.2010 காலத்திற்கான – கணக்கீட்டுக் காலத்திற்கான கணக்கு விவர அறிக்கை என்றால் சரிதான். அந்த கணக்கு விவர அறிக்கையில் கணக்கீட்டுக் காலத்தில் Debit செய்யப்பட்ட விவரங்கள், Credit செய்யப்பட்ட விவரங்கள், காசோலை மூலமாக Credit மற்றும் Debit செய்யப்பட்ட விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். Ex.P.77 வரிசை கணக்கு விவர அறிக்கையில் காசோலை மூலமாக 6 பரிவர்த்தனைகள் நடந்துள்ளது என்றால், சரிதான். Ex.P.77 வரிசையில் 11.10.2007 ஆம் தேதிய திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் சிட்டியூனியன் வங்கி சேமிப்பு கணக்கு எண்.418389-ல் Ex.P.114 -ல் சொல்லப்பட்டுள்ளபடி சக்தி பிலிம்ஸிடமிருந்து காசோலை மூலமாக மேற்படி சேமிப்பு கணக்கிற்கு ரூ.25 லட்சம் வரப்பெற்றதாக எந்த குறிப்பும் இல்லை என்றால், சரிதான். ஆனால் Ex.P.114 ல் சொல்லியுள்ளபடி திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களது ரூ.25 லட்சமும், அவரது மனைவி திருமதி விஜயலட்சுமி பழனிசாமியின் ரூ.21,55,520/-ம் இரண்டும் சேர்ந்து 11.10.2007 ஆம் தேதியில் ரூ.46,55,520/- சேமிப்பு கணக்கில் வரவாகியுள்ளது. அதற்கு சக்தி பிலிம்ஸின் Statement of account Ex.P.114 ல் இணைக்கப்பட்டுள்ளது. Ex.P.114 ல் இரண்டாவதாக காண்பிக்கப்பட்டுள்ள 02-04-2004 தேதிய ஐசிஐசிஐ வங்கி, கோயமுத்தூர் காசோலை எண்.144205 மூலமாக ரூ.20 லட்சம் திருப்பூர் சக்தி பிலிம்ஸிற்கு திருமதி விஜயலட்சுமி அவர்களால் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால், சரிதான். திருமதி விஜயலட்சுமி அவர்கள் திருப்பூர் சக்தி பிலிம்ஸிற்கு மேற்படி ரூ.20 லட்சம் வழங்கியதாகச் சொல்வது குறித்து எனக்கு

நேரடியாகத் தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. Ex.P.114 ல் மேற்படி ரூ.20 லட்சத்திற்கு வருமானம் மூலத்திலிருந்து வரி பிடித்தம் செய்யப்பட்ட தொகை (TDS Deduction ) ரூ.24,480/- போக ரூ.1,55,520/- காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக வங்கி நடவடிக்கையில் ஏதேனும் தொகை வைப்பீடு செய்யப்பட்டிருந்தால், அவ்வைப்பீட்டிற்கு வங்கி வட்டி அளிக்கும்பட்சத்தில் அந்த விவரம் Statement of account-ல் காண்பிக்கப்படும் என்றால், சரிதான். ஒரு தனி நபரும் அல்லது நிறுவனமும் தாம் வாங்கும் கடனுக்கு வட்டி வழங்கலாம். ஒரு தனி நபரும் அல்லது நிறுவனமும் தாம் வாங்கும் கடனை திருப்பிக் கொடுக்கும்போது ஒரே காசோலை மூலமாக அசலும், வட்டியும் சேர்த்துத்தான் தருவார்கள் என்றால், சரிதான். அசலுக்கு தனியாக ஒரு காசோலையும், வட்டிக்கு தனியாக ஒரு காசோலையும் தரவேண்டிய அவசியம் இல்லை. Ex.P.114-ல் 1,2 ல் சொல்லியுள்ள நடவடிக்கைகள் இரண்டு நிறுவனங்களுக்கிடையேயான நடவடிக்கைகள் அல்ல என்றாலும், ஒரு தனி நபருக்கும், மெசர்ஸ் சக்தி பிலிம்ஸுக்குமான நடவடிக்கைகள் என்றால், சரிதான். எனது முதல் விசாரணை சாட்சியப்படி ரூ.25 லட்சமும், ரூ.20 லட்சமும் மெசர்ஸ் சக்தி பிலிம்ஸுக்கு கடனாக வழங்கப்பட்டதா என்றால், சரிதான். கடனாக வழங்கப்பட்டதுதான். Ex.P.114 ஆவணத்தில் 1 வது நடவடிக்கையாக சொல்லப்படும் ரூ.25 லட்சத்திற்கு வட்டி ஏதும் வழங்கப்படவில்லை என்றால், சரிதான்.

கேள்வி - Ex.P.77 வரிசை ஆவணத்தில் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் சிட்டி யூனியன் வங்கி சேமிப்பு கணக்கு பரிவர்த்தனையில் 11.10.2007 ஆம் தேதி காசோலை எண்.247185 மூலமாக ரூ.25 லட்சமும், காசோலை எண்.247186 மூலமாக ரூ.21,55,520/- ம் மேற்படி சேமிப்பு கணக்கில் வரவாகியுள்ளது என்பதற்கான குறிப்புகள் இல்லை என்றால், அதற்கான தனி குறிப்பு மேற்படி சேமிப்பு கணக்கில் காணப்படவில்லை. ஏனென்றால் வங்கி இரண்டு

காசோலைகளையும் ஒரே credit ஆக கொடுத்துள்ளது.
(Multiple cheques in single credit)

Ex.P.77 வரிசை சேமிப்பு கணக்கில் இரண்டு காசோலைகள்வழி credit ஆனதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 11.10.2007 ல் S.CRS 4835316 எனக் குறிப்பிட்டு ரூ.46,55,520/- Credit செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி தொகையில் 31.12.2007 ஆம் தேதி LIC of India நிறுவனத்திற்கு ரூ.10 லட்சமும், 7.1.2008 ஆம் தேதி CD.18121: 5384771 ற்கு ரூ.10 லட்சமும், 9.1.2008 ஆம் தேதி CD.18121 : 5398927-ற்கு ரூ.10 லட்சமும், 10.1.2008 ஆம் தேதி CD. 18121 : 5405235-ற்கு ரூ.16 லட்சமும் Debit ஆகியுள்ளது என்றால், சரிதான். மேற்படி ரூ.46,55,520/- என்பது சக்தி பிலிம்ஸ்ஸால் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களுக்கு காசோலை மூலமாக வழங்கப்படவில்லை என்றால், சரியல்ல. S.CRS என்பது இரண்டு நிறுவனங்களின் பண பரிவர்த்தனை சம்மந்தமாக வரப்பெற்ற பண நடவடிக்கை தவிர, தனி நபருக்கும், சக்தி பிலிம்ஸிற்கும் இடையேயான பரிவர்த்தனை சம்மந்தமாக வரப்பெற்ற தொகை அல்ல என்றால், சரியல்ல. Ex.P.113 ல் திரு.பொங்கலூர் பழனிசாமியின் வருமானங்கள் விடுபட்டுள்ளது என பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால், சரியல்ல. Ex.P.114 ல் வரிசை எண்.3a ஆக காண்பிக்கப்பட்டுள்ள ரூ.8,07,715/- ரூபாய் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் விளக்கத்திற்கு பிறகு புலன் விசாரணை அதிகாரியால் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் நீக்கம் செய்யப்பட்டது என்றால், அந்த விவரம் எனக்குத் தெரியாது. அவ்வாறு நீக்கம் செய்யப்பட்ட விவரம் தெரியாமல் நான் முதல் விசாரணையில் Ex.P.114 ல் வரிசை எண்.3b ல் சொல்லப்பட்டுள்ளது தவறானது என பொய் சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல. Ex.P.114 ல் வரிசை எண்.3b-யில் சொல்லப்பட்டுள்ள ரூ.77,260/- + 25,900/- அமைச்சர்மீது தவறுதலாக காட்டப்பட்டுள்ளதாகவும், அந்த

தொகையை பொன்னம்மாள் செலுத்தியதாகவும், நான் சொல்வதற்கு எழுத்து மூலமான ஆதரவுகள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அதேபோல் மேற்படி வீட்டிற்கான வரிவிதிப்பும் திருமதி பொன்னம்மாள் பெயரில் ஏற்பட்டுள்ளதாகச் சொல்வதற்கும், திருமதி பொன்னம்மாள்தான் அதற்கான வரித்தொகையை செலுத்தி வருகிறார் என நான் சொல்வதற்குமான ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை என்றால், சரிதான். Ex.P.114, பத்தி 3c-யில் கணக்கீட்டுக் காலத்திற்கு பிறகு முன்னால் அமைச்சர் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களால் செலுத்தப்பட்ட ரூ.2,29,550/- ஐயும் சேர்த்து செலவினமாக எடுத்துக் கொள்ளப்பட்டது தவறு என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளது குறித்த கணக்கு Ex.P.114 ஆவணத்தில் கொடுக்கப்பட்ட விளக்கத்தின்படி புலன் விசாரணை அதிகாரியால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த தொகை கணக்கீட்டுக் காலத்தில் கணக்கீட்டுக்குள்ளாகும் நபரின் செலவினத்திலிருந்து கழிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், அது பற்றிய விவரம் எனக்குத் தெரியாது. மேற்படி நிகழ்மை குறித்து நான் அளித்துள்ள முதல் விசாரணை சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால், சரியல்ல. Ex.P.114 ல் பத்தி 4-ல் 30.6.2006 ஆம் தேதி காசோலை எண்.354907 மூலமாக ரூ.10 லட்சம் ஐசிஎஸ் என்ற கணக்கில் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களால் வரவு வைக்கப்பட்டுள்ளது என்று காண்பித்துள்ளதற்கு பதில் அறிவிப்பாக மேற்படி தொகை ரூ.10 லட்சம் விஜயா மினரல் எக்ஸ்போர்ட் கூட்டாண்மை நிறுவனத்தில் சிட்டி யூனியன் வங்கி கணக்கிலிருந்து கணக்கு எண்.18132 கணக்கிலிருந்து பணத்தை எடுத்து செக்யூரிட்டி சர்வீஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் மூலமாக திருமதி இந்து முருகேசன் அவர்கள் பெயரில் பங்கு வாங்கப்பட்டுள்ளதாக நான் முதல் விசாரணையில் சொல்வதற்கான ஆதரவுகள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். விஜயா மினரல்ஸ் எக்ஸ்போர்ட் என்ற கூட்டாண்மை நிறுவனத்தில் திரு.பொங்கலூர்

பழனிசாமி அவர்களும் ஒரு பங்குதாரர் என்றால், சரிதான். Ex.P.114 ஆவணத்தில் 30.6.2006 ஆம் தேதி அன்று குறிப்பிடப்பட்டுள்ளது சரிவர ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் குறிப்பிட்டுள்ளோம் என்றால், சரியல்ல. தவறுதலாக தட்டச்சுபிழை என தற்பொழுது நான் பின்யோசனையாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. Ex.P.113 ஆவணத்திலேயே 30.6.2006 என்று தட்டச்சு பிழையாகத்தான் சொல்லப்பட்டுள்ளது. Ex.P.114 பதில் விளக்க அறிவிப்பை நான் புலனாய்வு அதிகாரியிடம் நேரடியாகச் சென்று கொடுத்ததாகச் சொல்வது பொய் என்றால், சரியல்ல. நான் நேரடியாக Ex.P.114 பதில் விளக்கத்தை நேரடியாக புலனாய்வு அதிகாரியிடம் கொடுத்ததாகச் சொல்வதற்கு ஆதரவும், குறிப்பும் இல்லை என்றால், சரிதான். Ex.P.114 ஆவணத்தை நான் உண்மையிலேயே புலனாய்வு அதிகாரியிடம் நேரடியாக கொடுத்திருந்தால் புலனாய்வு அதிகாரி ஆடிட்டர் என்ற முறையில் என்னை விசாரித்திருப்பார் என்றால், சரியல்ல. Ex.P.114 பதில் விளக்கத்திற்கு பிறகு புலனாய்வு அதிகாரி வாய்ப்பு கொடுக்கவில்லை என சொல்வது குறித்து புலனாய்வு அதிகாரிக்கு நாங்கள் அறிவிப்பு ஏதும் கொடுத்தோமா என்றால், இல்லை. நீதிமன்றத்தின் மூலம் என்னை வழக்கில் புலனாய்வு அதிகாரி விசாரணை செய்யவேண்டுமென கோரி மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை. Ex.P.114 ஆவணத்தில் இந்துமதி முருகேசன் பெயரில் ரூ.10 லட்சத்திற்கு பங்குகள் வாங்கப்பட்டதாகச் சொல்வதற்கான ஆவணங்கள் எதுவும் இணைக்கப்படவில்லை என்றால், சரிதான். திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் சிட்டி யூனியன் வங்கி, ராம்நகர் கிளை, கோயமுத்தூர் என்ற சேமிப்பு கணக்கு எண்.418389, நாள் 11.10.2007 ஆம் தேதியில் ரூ.101/- செலுத்தி துவங்கப்பட்டது என்றால், சரிதான். உண்மையிலேயே சக்தி பிலிம்ஸிலிருந்து இரண்டு காசோலை மூலம் ரூ.46,55,520/- திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் சேமிப்பு கணக்கிற்கு வரப்பெற்றிருந்தால், அது குறித்த விவரம் Ex.P.77 வரிசையில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும்,

அவ்வாறு மேற்கண்ட தொகை சேமிப்பு கணக்கிற்கு சாசோலைகள் மூலம் வரப்பெறவில்லை என்றால், சரியல்ல. மேற்கண்ட தொகை மேரீஸ் சிமெண்ட் கணக்கிலிருந்து திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களது சிட்டியூனியன் வங்கி, ராம்நகர் கிளைக்கு வந்த தொகை என்றால், சரியல்ல. மேற்கண்ட தொகை ரூ.46,55,520/- ஆனது இரண்டு நிறுவனங்களுக்கிடையேயான பரிவர்த்தனை மூலமான தொகை என்றாலும், தனிப்பட்ட நபருக்கும், தனிப்பட்ட நிறுவனத்திற்கும் இடையேயான பரிவர்த்தனையான தொகை அல்ல என்றாலும் சரியல்ல. புலன் விசாரணை காலக் கட்டத்திலேயே மேற்படி தொகை சக்தி பிலிம்ஸ் மூலமாக கிடைக்கப் பெற்ற தொகை எனச் சொல்வதற்கான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாததால்தான் புலன் விசாரணை அதிகாரி சாட்சிகளின் வாக்கு மூலங்கள், ஆவணச் சாட்சியங்கள், வங்கி பரிவர்த்தனை பதிவேடுகள் ஆகியவற்றை பரிசீலனை செய்து மேற்கண்ட தொகை ரூ.46,55,520/- ஐ திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் வருமானமாக பாவித்து, கணக்கீட்டுக் காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக சேர்க்கப்பட்ட சொத்து என புலன் விசாரணையில் கண்டறிந்து குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. இவ்வழக்கின் முழு விவரங்களும் எனக்கு சரிவர தெரியாது என்றாலும், முன்னால் அமைச்சர் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் வேண்டுதலுக்கிணங்க வழக்கு விவரங்கள் தெரியும் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ஆவணங்கள் எதிலும் நான் கையெழுத்து இடாததால் எனது வாய்மொழி சாட்சியம் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால், சரியல்ல.

**மறு விசாரணை (அனுமதியுடன்)**

நான் ஆவணங்களை பார்வையிட்டதன் அடிப்படையில்தான் Ex.P.114 ல் பதில் கொடுத்துள்ளேன். எனது வாடிக்கையாளர் எவரது கணக்குகளிலும்

வாடிக்கையாளர்களின் நடவடிக்கை குறித்து ஆடிட்டர் என்ற முறையில் நேரடியாக தெரிந்து செயல்பட முடியாது. ஆவணங்களின் அடிப்படையில்தான் நாங்கள் செயல்படுவோம்.

ஒம்/பழனிசாமி,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/R.Sakthivel,
Principal District Judge,
Coimbatore.